THE HINDU
Region

L-G flags off rally to highlight dangers of overuse of antibiotics

Experts stress the need to prevent infections, reduce antibiotic misuse, and foster awareness among the people to combat antimicrobial resistance

Call for rational use: L-G Kailashnathan flagging off the awareness rally to promote responsible use of antibiotics, at the Gandhi Statue on Rock Beach on Sunday. SPECIAL ARRANGEMENT

The Hindu Bureau
PUDUCHERRY

The importance of a rational use of antibiotics to prevent the spiralling incidence of drug-resistant microbial infections was the key takeaway from an awareness rally organised by the Indian Association of Medical Microbiologists, Puducherry Chapter, here on Sunday.

Lieutenant-Governor K. Kailashnathan flagged off the rally at the Gandhi Statue on Rock Beach.

The rally stressed the urgent need for responsible antibiotic use among medical professionals and the public, and called for collaborative efforts to combat this global health challenge.

Around 400 volunteers, including doctors, faculty members, students of medical, nursing, and allied health sciences, technical and healthcare staff from the eight medical colleges in the region, participated in the rally demand urgent action to prevent the misuse/abuse of antibiotics.

The rally also highlighted the importance of preventing infections, reducing antibiotic misuse, and fostering awareness to combat the rising threat of antimicrobial resistance.

Antimicrobial resistance

The event was part of a united effort to combat the global crisis of antimicrobial resistance (AMR), in line with the World Health Organization's (WHO) call to observe World AMR Awareness Week every year to promote responsible antibiotic use and raise awareness on the dangers posed by AMR.

According to experts, AMR occurs when bacteria, viruses, fungi, and parasites change over time, no longer responding to medicines and making infections harder to treat.

Global health threat

AMR is a major threat to global public health that endangers lives and increases healthcare costs, putting essential surgical procedures at risk.

Some of the important causes for the rise in AMR are over-the-counter use of antibiotics, the use of antibiotics for viral illnesses or without valid prescription.

Addressing the participants, Rakesh Aggarwal, Director, Jipmer, urged the participants for a rational use of antibiotics.

S. Sevvel, Health Director, Ramachandra V. Bhat, Dean, Indira Gandhi Medical College & Research Institute (IGMCRI), and J. Shanmugham, senior microbiologist and former president of the association, participated in the rally.

Rakesh Singh, Head of Microbiology, Jipmer, and the association's current president, said the rally aimed to empower the public to play a vital role in tackling antimicrobial resistance.

'A silent pandemic'

Sheela Devi C., Professor of Microbiology, Pondicherry Institute of Medical Sciences (PIMS) and the association's secretary, said, "AMR is a silent pandemic. It's happening within our communities, affecting our families, and making everyday infections difficult to be treated."

Reba Kanungo, senior microbiologist and former president of the association, urged the public not to take antibiotics for mild fever or throat infection.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
18.11.2024 (திங்கட்கிழமை)

நுண்ணுயிர் எதிர்ப்பு தின விழிப்புணர்வு ஊர்வலம்

மருத்துவ கல்லூரி மாணவ-மாணவிகள் பங்கேற்பு

புதுச்சேரி, நவ.18-

இந்திய மருத்துவ நுண்ணுயிரியலாளர் சங்கத்தின் புதுச்சேரி கிளை சார்பில் கடற்கரை சாலையில் நுண்ணுயிர் எதிர்ப்பு தின விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று காலை நடந்தது. இதன் தொடக்க விழாவில் கவர்னர் கைலாஷ் நாதன் கலந்து கொண்டு கொடியசைத்து ஊர்வலத்தை தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் ஜிப்மர் மருத்துவமனை இயக்குனர் டாக்டர் ராகேஷ் அகர்வால், அரசு பொது மருத்துவமனை இயக்குனர் (பொறுப்பு) டாக்டர் செவ்வேள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

காந்தி திடல் அருகில் இருந்து தொடங்கிய இந்த ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் கடற்கரை சாலையில் முடிவடைந்தது. ஊர்வலத்தின் போது நுண்ணுயிர் எதிர்ப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடி சென்றனர். ஊர்வலத்தில் பல்வேறு மருத்துவ கல்லூரியை சேர்ந்த மாணவ-மாணவிகள், டாக்டர்கள், பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

தினமலர்
புதுச்சேரி | திங்கள் | 18.11.2024

நுண்ணுயிர் எதிர்ப்பு திறன் விழிப்புணர்வு ஊர்வலம்

புதுச்சேரி, நவ. 18– இந்திய நுண்ணுயிரியலாளர் சங்கம் புதுச்சேரி கிளை சார்பில், நுண்ணுயிர் எதிர்ப்பு திறன் விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.

கடற்கரை சாலை காந்தி சிலை எதிரில் துவங்கிய ஊர்வலத்தை கவர்னர் கைலாஷ்நாதன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால், அரசு மருத்துவமனை இயக்குநர் (பொ) செவ்வேள் முன்னிலை வகித்தனர்.

புதுச்சேரியில் உள்ள பல்வேறு மருத்துவ கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் கலந்து கொண்ட மருத்துவ மாணவர்கள், ஆண்டிபயாட்டிக்ஸ் மருந்துகளை சரியாக பயன்படுத்துங்கள் என, விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி சென்றனர்.

முக்கிய வீதிகள் வழியாக சென்ற ஊர்வலம் மீண்டும் கடற்கரையை அடைந்தது.

இந்திய நுண்ணுயிரியலாளர் சங்கம் புதுச்சேரி கிளை சார்பில் கடற்கரை சாலையில் நடந்த நுண்ணுயிர் எதிர்ப்பு திறன் விழிப்புணர்வு ஊர்வலத்தை கவர்னர் கைலாஷ்நாதன் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

தினகரன்
நவம்பர் 18, 2024 திங்கட்கிழமை

நுண்ணுயிர் எதிர்ப்பு திறன் விழிப்புணர்வு பேரணி

புதுச்சேரி கடற்கரை காந்தி சிலை அருகே மருத்துவ மாணவர்கள் பங்கேற்ற நுண்ணுயிர் எதிர்ப்புத்திறன் விழிப்புணர்வு பேரணியை கவர்னர் கைலாஷ்நாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மருத்துவ மாணவர்கள் பங்கேற்பு

புதுச்சேரி, நவ. 18: இந்திய நுண்ணுயிரியலாளர் சங்கத்தின் புதுச்சேரி கிளை சார்பில் கடற்கரை சாலை காந்தி சிலை அருகே நேற்று காலை நுண்ணுயிர் எதிர்ப்புத்திறன் விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதில் கவர்னர் கைலாஷ் நாதன் கலந்துகொண்டு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஜிப்மர் மருத்துவமனை இயக்குனர் டாக்டர் ராகேஷ் அகர்வால், அரசு பொது மருத்துவமனையின் இயக்குனர் (பொறுப்பு) டாக்டர் செவ்வேள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பேரணியில் புதுச்சேரியில் உள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரிகளை சேர்ந்த மாணவர்கள், டாக்டர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

தினமணி
திங்கள்கிழமை, 18 நவம்பர் 2024

நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் விழிப்புணர்வுப் பேரணி

புதுச்சேரி கடற்கரைச் சாலை காந்தி சிலை திடலில் தொடங்கிய நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் விழிப்புணர்வுப் பேரணியில் பங்கேற்ற மாணவ, மாணவிகள்.

புதுச்சேரி, நவ.17: புதுச்சேரியில் நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் விழிப்புணர்வுப் பேரணி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பொதுமக்களிடையே நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நுண்ணுயிரியலாளர் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. தேசிய அளவிலான இந்தச் சங்கத்தின் புதுவை மாநிலக் கிளை சார்பில் ஞாயிற்றுக்கிழமை நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

கடற்கரைக்காந்திசிலைமுன் நடைபெற்றபேரணிதொடக்க நிகழ்ச்சியில் புதுவை துணைநிலை ஆளுநர் கே.கைலாஷ் நாதன் நுண்ணுயிர் அடையாள நீலநிறக் கொடியை அசைத்து தொடங்கிவைத்தார்.

ஜிப்மர் மருத்துவமனை இயக்குநர் ராகேஷ் அகர்வால் முன்னிலை வகித்தார். சுகாதாரத் துறை இயக்குநர் (பொ) செல்வவேள் மற்றும் மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகள் பேரணியில் பங்கேற்றனர்.

தினகரன்
நவம்பர் 18, 2024 திங்கட்கிழமை

ஜிப்மரில் நாளை முதல்

பிஎஸ்சி நர்சிங் படிப்புக்கு கலந்தாய்வு

25ம் தேதி வகுப்புகள் துவங்குகிறது

புதுச்சேரி, நவ. 18: புதுச்சேரி ஜிப்மரில் பிஎஸ்சி நர்சிங் மற்றும் அலைடு ஹெல்த் சயின்ஸ் படிப்புகளுக்கான கலந்தாய்வு நாளை துவங்குகிறது. 25ம் தேதி வகுப்புகள் துவங்குகிறது.

புதுச்சேரி ஜிப்மரில் பிஎஸ்சி நர்சிங் படிப்பில் பெண்கள்-85, ஆண்கள்-9 என 94 இடங்களும், பிஎஸ்சி அலைடு ஹெல்த் சயின்ஸ் பாடப் பிரிவுகளுக்கு 87 இடங்களும் என மொத்தமாக 181 இடங்கள் உள்ளன. இந்த இடங்களுக்கான மாணவர் சேர்க்கை ஆண்டுதோறும் நீட் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் நிரப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில் 2024-25ம் கல்வி ஆண்டு பிஎஸ்சி நர்சிங் மற்றும் பிஎஸ்சி அலைடு ஹெல்த் சயின்ஸ் பாடப்பிரிவுகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு ஜிப்மர் இணையதளத்தில் கடந்த அக்.3ம் தேதி முதல் அக்.24ம் தேதி மாலை 4 மணி வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

இதற்கு நாடு முழுவதிலும் இருந்து நீட் தேர்வில் தகுதி பெற்ற மாணவ, மாணவிகள் ஜிப்மர் இணையதளத்தில் விண்ணப்பித்தனர். இதையடுத்து, பிஎஸ்சி நர்சிங் மற்றும் அலைடு ஹெல்த் சயின்ஸ் படிப்புக்கான தரவரிசை பட்டியல் ஜிப்மர் இணையதளத்தில் கடந்த 7ம் தேதி வெளியிடப்பட்டது. இப்பட்டியலில் 2,738 மாணவ, மாணவிகள் இடம் பெற்றுள்ளனர்.

சான்றிதழ் சரிபார்ப்புக்கு தேவையான ஆவணங்கள்

சான்றிதழ் சரிபார்ப்புக்கு வரும் மாணவர்கள் புகைப்படத்துடன் கூடிய அடையாள சான்று (ஆதார், வங்கி கணக்கு புத்தகம், ஓட்டுநர் உரிமம்), சான்றிதழ் சரிபார்ப்புக்கான பட்டியல், நீட் தேர்வுக்கான அடையாள அட்டை, நீட் தேர்வு மதிப்பெண் அட்டை, பதிவிறக்கம் செய்யப்பட்ட பிஎஸ்சி படிப்புக்கான விண்ணப்ப படிவம், பிறந்த தேதிக்கான சான்று, பிளஸ்-2 தேர்வின் தேர்ச்சி சான்றிதழ் மற்றும் மதிப்பெண் பட்டியல், நன்னடத்தை சான்றிதழ், சாதி மற்றும் குடியிருப்பு சான்றிதழ், மருத்துவ சான்றிதழ், 6 பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் உள்ளிட்ட ஆவணங்களை கொண்டுவர வேண்டும்.

இந்நிலையில் பிஎஸ்சி நர்சிங் மற்றும் அலைடு ஹெல்த் சயின்ஸ் படிப்புகளுக்கான கலந்தாய்வு நாளை (19ம் தேதி) மற்றும் நாளை மறுநாள் (20ம் தேதி) நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ஜிப்மர் மருத்துவ வாரியத்தின் மருத்துவ பரிசோதனை வருகிற 18ம் தேதி காலை 10 மணிக்கு ஜிப்மர் அகடாமிக் மையத்தில் நடைபெறுகிறது. 19ம் தேதி காலை 8 மணி முதல் 11 மணி வரை 1 முதல் 1,400 வரையும், காலை 11 மணி முதல் மதியம் 2 மணி வரை 1401 முதல் 2738 வரையும் தரவரிசை பட்டியலில் இடம் பெற்றுள்ள மாணவர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு அப்துல் கலாம் ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது. 19ம் தேதி இரவு 7 மணிக்கு கலந்தாய்வில் பங்கேற்பதற்காக தகுதியான மாணவர்களின் தற்காலிக பட்டியல் ஜிப்மர் இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

20ம் தேதி காலை 8 மணிக்கு தகுதியான மாணவர்கள் அப்துல் கலாம் ஆடிட்டோரியத்திற்கு வர வேண்டும். காலை 8.30 மணிக்கு கலந்தாய்வுக்கான செயல்முறைகள் துவங்கும். இதில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 21ம் தேதி காலை 9 மணிக்கு ஜிப்மர் அகாடமிக் மையத்தில் மருத்துவ பரிசோதனை நடைபெறும். அன்று பிற்பகல் கலந்தாய்வு மூலம் சீட் பெற்ற மாணவர்களுக்கு சேர்க்கை ஆணை வழங்கப்படும். 25ம் தேதி பிஎஸ்சி நர்சிங் மற்றும் அலைடு ஹெல்த் சயின்ஸ் படிப்புகளுக்கான வகுப்புகள் துவங்கும். மேலும் விவரங்களுக்கு ஜிப்மர் இணையதளத்தை பார்க்கவும். இத்தகவலை ஜிப்மர் அகடாமிக் டீன் தெரிவித்துள்ளார்.